OS No.27/2013, நாள்: 28.01.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னசாமி | வயது | : 70 |
| தந்தை பெயர் | : வெங்கடப்பநாயுடு | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : காட்டாகரம் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

வா.சா.2 ___ சின்னசாமி ஆஜர், குறுக்கு விசாரணை :-

என்னுடன் பிறந்தவர்கள் அம்பிகா(எ)ராஜம்மாள், ராஜப்பன், கண்ணம்மாள், பாலகிருஷ்ணன் மற்றும் மாரியப்பன் என்றால் சரிதான். தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து என்னுடைய தந்தை வெங்கடப்பநாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வெங்கடப்ப நாயுடுமீது முத்துகவுண்டன் எந்தெந்த புல எண்களுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எந்தெந்த சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். எந்த சொத்திற்கு முத்துகவுண்டன் வழக்கு தாக்கல் செய்தாரோ அதே சொத்தை நான், என் தந்தை, ராஜப்பன், மைனர் மாரியப்பனுக்கு அவருடைய தந்தை ஆகியோர் சேர்ந்து போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடுவிற்கு கிரயம் செய்து வைத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரயத்தின்போது நான் என் தந்தை ஆகியோர் கையொப்பமிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த தொகை 1000த்தை இதுவரை செலுத்தவில்லை. நாங்கள் எழுதிக்கொடுத்த

கிரய ஆவணத்திலேயே ரூ.1000ம் செல்லாகிவிட்டது என்றும் அன்றைய தினமே நாங்கள் போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடுவிற்கு சுவாதீனம் அளித்துவிட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதியிருந்தாலும் பணம் செலுத்தவில்லை. அதே ஆவணத்தில் மேற்படி சொத்திற்கும் எங்களுக்கும் எங்களுடைய வாரிசுகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என குறிப்பாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமான சொத்து போட்ட முழவதையும் கிரயம் செய்துகொடுத்தோம் என்றால் சரியல்ல. அடமான சொத்து முழுவதையும் கிரயம் செய்துகொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1000 ரூபாய் முத்துகவுண்டனுக்குதான் சேரவேண்டும் என்றால் சரிதான். முத்துகவுண்டன் எங்கள்மீதோ என் தந்தை மீதோ போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடுமீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் பணம் செலுத்தாததால் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டார். எந்த நீதிமன்றத்தில் எந்த எண்ணில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் என் மீதும் என் தந்தை மீதும் கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். என் மீது எந்த வழக்கும் போடவில்லை என்றும் வழக்கிற்காக என் மீது போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பணம் ரூ.1000ம் செலுத்தாத காரணத்தினால் கிரயப்பத்திரத்தை ரத்து செய்யவேண்டி நானோ என் தந்தையோ என் தந்தையின் மற்ற வாரிசுகளோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை ஏதாவது எடுத்தோமா என்றால் இல்லை. மேற்படி சொத்தை பொறுத்து போடியம்மாள் முனியப்ப நாயுடும் முத்துகவுண்டனுக்கு பணம் செலுத்திவிட்டதால் முத்துகவுண்டன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துகவுண்டன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 10-15 ஆண்டுகளாக இருக்கும். 2007க்கு பின்னிட்டு இறந்தார் என்றால் சிரிதான். எங்களுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டதாக கூறியிருக்கும் நிலையில் எந்தெந்த புல

எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் யார் யாருக்கு பாகம் போனது என்றால் புல எண்கள் தெரியாது. தலா 75 முதல் 80 செண்ட் வரை பங்கு வரும். போடியம்மாளுக்கும் முனியப்ப நாயுடுவிற்கு கிரயம் ஆனபோது புல எண்கள் எதுவும் உட்பிரிவு ஆகவில்லை என்றால் ஏற்பட்டுவிட்டது. தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்திற்கு அப்போதே உட்பிரிவு ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். நான் கூறும் விதமாக எந்த உட்பிரிவும் எற்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தண்டபாணிக்கு கிரயம் செய்த ஆவணத்தில் மேற்படி சொத்து எனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் என் அப்பா எனக்கு கொடுத்த சொத்து. வழக்கு சொத்திற்கு பழைய பட்டா எண் அல்லது செலுத்தப்பட்ட கந்தாய ரசீது ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சகுந்தலாவிற்கும் தண்டபாணிக்கும் எனக்கும் பிரச்சனை எற்பட்டு நில அபகரிப்பு பிரிவில் பிரச்சனை ஏற்பட்டு விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நிலஅபகரிப்பு பிரிவில் 1967ம் ஆண்டுக்குரிய கிரய ஆவணப்படி சகுந்தலாவிற்கு நிலத்தை அளந்து கொடுத்துவிடவேண்டும் என்று முடிவு செய்தார்கள் என்றால் இல்லை. 27.12.1967ம் ஆண்டு கிரய செய்துகொடுத்த தேதிமுதல் போடியம்மாளும், முனியப்பநூயுடுவும் அனுபவத்தில் இருந்து அவர்களுக்கு பின்னிட்டு பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தேதி முதல் நாங்கள் அனுபவித்தில் இருந்ததிருந்தால் பழைய பட்டா, கந்தாய ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்திருப்போம் என்றும் அவற்றை தாக்கல் செய்யாததால் எங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஏற்கனவே வழக்கு சொத்தை பொறுத்து கிரயம் ஏற்படுத்திவிட்டதால் வாதி பெயரில் கிரயம் செய்துக்கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்று மோசடியான எண்ணத்தில் நாங்களும் வாதியும் இந்த பொய்யான வழக்கை தாக்கல்

செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு நிலஉடமை மேம்பாடு திட்டத்தின்போது என் பெயரில் தவறாக பட்டா வழங்கப்பட்டதை அனுசரித்து நான் போலியாக வாதி பெயரில் கிரயம் செய்துகொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது தாக்கல் செய்துள்ள பட்டாவும் தனிப்பட்டாவாக இல்லை என்றும் கூட்டு பட்டாவாக இல்லை என்றும் மோசடியாக ஆவணம் ஏற்படுத்தவேண்டி தனியாக கிரயம் செய்துகொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1967ம் ஆண்டு கிரய பத்திரத்தில் 4-5 புல எண்கள் உள்ளன என்றும் என் பெயரில் ஒரு புல எண் மட்டும் தனிப்பட்டாவாகிவிட்டதை வைத்து கிரயபத்திரத்தை எழுதிவைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ள பட்டா முறையான உரிமையாளர்களையே பிரதிவாதிகளையே விசாரணை செய்யாமல் வழங்கப்பட்ட பட்டா என்று சொன்னால் சரியல்ல. அந்த பட்டாவின் அடிப்படையில் வாதி எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. வழக்குசொத்துக்கள் கிரயம் ஆன தேதி முதல் பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் உள்ளது என்றும் நிலஉடமை மேம்பாடு திட்டத்திற்கு முன்பு பட்டா அவர்கள் பெயரில்தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும் வழக்கு சொத்திற்கும் எந்தவிதமான அனுபவ சுவாதீனம் இல்லை என்றும், வாதியின் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதிகளிமிருந்து அக்கிரம லாபம் அடையும் எண்ணத்தில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.